| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திருமதி. கே.பி.மகேஸ்வரி, எம்.ஏ.,பி.எட்.,<br>இணை இயக்குநர் (பணியாளர்),<br>அரசுத் தேர்வுகள் இயக்ககம்,<br>சென்னை – 600 006. | அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி<br>இயக்குநர்கள் |

**ந.க.எண். 018310 /பி2/2024** **நாள் : 19.02.2025**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத்தேர்வு மார்ச் / ஏப்ரல் 2025 – விடுபட்ட / பார்கோடு இல்லாத / சேதமடைந்த முகப்புத்தாட்கள் — பதிவிறக்கம் செய்ய அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

**பார்வை :** இவ்வலுவலக இதே எண்ணிட்டக் கடிதம், நாள்: 05.02.2025

******

பார்வையில் காணும் இவ்வலுவலக கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நடைபெறவுள்ள மார்ச்/ ஏப்ரல் **2025** இடைநிலைப் பள்ளி விடுப்புச் சான்றிதழ் பொதுத் தேர்வு தொடர்பாக அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட கிடைக்கப் பெறாத முகப்புத்தாட்கள், சேதமடைந்த, பார்கோடு இல்லாத முகப்புத்தாட்களுக்கு இவ்வலுவலகத்தால் மீளவும் புதிய முகப்புத்தாட்கள் அச்சமூத்தம் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில், தலைமை ஆசிரியர்கள் / முதன்மைக் கண்காணிப்பாளர்களிடமிருந்து பெறப்படும் கிடைக்கப் பெறாத முகப்புத்தாட்கள், சேதமடைந்த, பார்கோடு இல்லாத முகப்புத்தாட்களுக்கான மாற்று முகப்புத்தாட்களை **21.02.2025** அன்று பிற்பகல் முதல் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்களுக்கென வழங்கப்பட்ட USER ID / PASSWORD -யை கொண்டு முகப்புத்தாட்களை பதிவிறக்கம் மற்றும் அச்சமுத்தம் செய்து முதன்மை விடைத்தாட்களுடன் சேர்த்து தைத்து சம்பந்தப்பட்ட தேர்வு மையங்களுக்கு வழங்கிட தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**முகப்புத்தாட்கள் பெறப்படவில்லை / சேதமடைந்திருந்தல் / பார்கோடு இல்லாதிருத்தல் (அனைத்துப் பாடங்களுக்கும்) ஆகிய காரணங்களுக்காக மட்டுமே புதிய முகப்புத்தாட்களை கோர வேண்டும் என்பதை** அனைத்து தேர்வு மைய தலைமை ஆசிரியர்கள் / முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் வலியுறுத்தி தெரிவிக்க வேண்டும்.

..2..

மேலும், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள் அளவில் அச்சமுத்தம் செய்து வழங்கப்படும் அனைத்து முகப்புத்தாட்களுக்கான விவரங்களை தனிப் பதிவேடு மேற்கொண்டு பராமரிக்குமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தேர்வு மைய இறுதி பெயர் பட்டியலில் சரியான பதிவுகள் இருந்து, தேர்வு மையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட முகப்புத்தாட்களில் கீழ்க்குறிப்பிட்டுள்ள திருத்தங்கள் ஏதேனும் இருந்தால் பின்வரும் வழிமுறைகளின்படி செயல்பட தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கு அறிவுரை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. தேர்வரின் பெயர் (Candidate’s Name)
2. பயிற்று மொழி (Medium)
3. மொழிப்பாடம் மாறியிருத்தல்
4. புகைப்படம் மாறியிருத்தல்

| வ. எண் | முகப்புத்தாளில் (Topsheet) உள்ள குறை | | நிவர்த்தி செய்தல் |
|---|---|---|---|
| 1. | முகப்புத்தாளில் (Topsheet) தேர்வரின் பெயர் தவறாக இருப்பின் | : | பெயர் சிவப்பு நிற மையினால் திருத்தம் செய்து முதன்மைக்கண்காணிப்பாளர் attest செய்தல் வேண்டும். **(As per Centre Nominal Roll)** |
| 2. | முகப்புத்தாளில் (Topsheet) பயிற்று மொழி (Medium) தவறாக இருப்பின் | : | முகப்புத்தாளில் பயிற்றுமொழியினை (Medium) சிவப்பு நிற மையினால் திருத்தம் செய்து முதன்மைக் கண்காணிப்பாளர் attest செய்தல் வேண்டும். **(As per Centre Nominal Roll)** |
| 3. | முகப்புத்தாளில் (Topsheet) மொழிப்பாடம் (First Language) தவறாக இருப்பின் | : | முகப்புத்தாளில் மொழிப்பாடத்தினை (First Language) சிவப்பு நிற மையினால் திருத்தம் செய்து முதன்மைக் கண்காணிப்பாளர் attest செய்தல் வேண்டும். **(As per Centre Nominal Roll)** |
| 4. | மாணவர்களின் **(Photo)** புகைப்படம் மாறியிருந்தால் | : | தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் மாணவரின் சரியான புகைப்படத்தை பெற்று ஒட்டி Attest செய்தல் வேண்டும் |

**ஒம்/–**
**இணைஇயக்குநர் (பணியாளர்)**

<u>நகல்</u>

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் .
2. இணை இயக்குநர் (கல்வி), பாண்டிச்சேரி.

–தகவலுக்காக